# நமது ஆராதனைகளில் தமிழ் கீர்த்தனைகள் பாடும் வழக்கம் உருவான வரலாறு

புராடஸ்டன்ட் கிறிஸ்து மார்க்கம் தமிழ்நாட்டின் தென்பகுதிகளில் 19ம் நூற்றாண்டில் மிக வேகமாக பரவி அநேக கிறிஸ்தவ கிராம மக்கள் உருவாயின. கிராமங்கள் தோறும் ஆலயங்கள் கட்டப்பட்டன. தினமும் மாலை ஆராதனைகள் தமிழில் நடத்தப்பட்டன. ஆனால் தமிழ்ப் பாடல்கள் பாட மிஷனெரிமார் அனுமதிக்கவில்லை. ஆங்கில மொழியிலும் இடையிலும் பாடப்பட்ட பாடல்களையே தமிழில் மொழி பெயர்த்து பாடி வந்தனர். ஒரு சில SG சபைகளில் வேதநாய சாஸ்திரியாரின் பாடல்களை ஆராதனைக்கு பின்பு பாட அனுமதித்தனர்.

இந்நிலையில் 1861ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் நாள், நெல்லை மாவட்டத்தின் மேற்கு பகுதியில் உள்ள CMS மிஷன் தலைமை ஸ்தானங்களில் ஒன்றான சுரண்டையில் ஒரு குளிர்ந்த மாலை வேளையில் Rev. H. Dixon & Rev. J.D. Simmons என்ற இரு CMS மிஷனெரிமார் தங்கள் பங்களாவின் வாராந்தாவில் உட்கார்ந்து குளிர்ந்த காற்றை அனுபவித்துக் கொண்டிருந்தனர். அச்சமயம் அவர்களின் காதில் இனிமையான தமிழ்ப் பாடல்கள் ஒலிக்க ஆரம்பித்தன. அப்பாடல்களை சொந்தமாக இசையும் தாளமும் அமைத்து பாடியவர்கள், பங்களாவின் அருகில் இருந்த மிஷன் போர்டிங் பாடசாலையின் மாணவர்களோடும், இசையினால் கவரப்பட்ட மிஷனேரி யார் அந்த மாணவர்களை அழைத்து அவர்களின் அருகில் அமர்ந்து பாடச் சொன்னார்கள். குதூகலம் அடைந்த மாணவர்கள் மிகவும் உற்சாகமாகப் பாட ஆரம்பித்தனர். மேனாட்டு இசையில் பாடப்பட்டு வந்த ஆராதனை பாடல்களை யாருமே இவ்வளவு உற்சாமாகவும் ஆத்மார்த்தமாகவும் பாடமுடிவதில்லை. இப்போது தான் மிஷனெரி DIXON ஐயர் தாங்கள் செய்து வரும் தவறை உணர்ந்தார். தாய் மொழியில் பாட அனுமதிக்காமல் ஆங்கில ராகத்திலும் (Tune) தாளத்திலும (Beat) அவர்களை பாட வற்புறுத்துவது மிகவும் தவறு என்று உணர்ந்தார்.

அதை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கையும் எடுத்தார். தாய்சபையாகிய CMS-க்கு எழுதி தமிழில் பாட்டுகளைப் பாட வேண்டிய

அவசியத்தை வற்புறுத்தினார். உடனடியாக தனது ஆளுகைக்கு உட்பட்ட சுரண்டை சேகரத்தில் தேவாராதனைகளில் கீர்த்தனைப்பாடல்கள் பாடவேண்டும் என்று கட்டளையிட்டு அதை செயல்படுத்தினார்.

அவ்வழக்கம் வெகு விரைவாக திருநெல்வேலி திருச்சபை முழுவதிலும் அனைத்து சபைகளிலும் மேற்கொள்ளப்பட்டது. நாளடைவில் பிறதமிழ்ச சபைகளிலும் இவ்வழக்கம் மேற்கொள்ளப்பட்டது. தங்களின் இனிய இசையின் மூலம் மிஷனெரிமாரை கவர்ந்து மனம் மாறச்செய்த அன்றைய மாணவர்களை நான் நினைவுகூர்ந்து பாராட்டுவோம்.

கிறிஸ்தவக் கீர்த்தனைகளின் முதல் பதிப்பு 1853-இல் வெளியிடப்பட்டாலும் ஆராதனைகளில் அது பெருமளவில் இடம்பெற உருவான சந்தர்ப்பம் 1861 என்று எடுத்துக் கொண்டால் நமது கீர்த்தனைகளின் உபயோகம் 150 வருடங்களை தாண்டிவிட்டது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**மேற்கண்ட தகவல்களுக்கு ஆதாரம்**

திருமறையூர் (நாசரேத்) வேதசாஸ்திரிக் கல்லூரியிலும் பின்னர் கல்கத்தா, செராம்பூர், வேதசாஸ்திர கலாசபையிலும் திருச்சபை சரித்திர (Chruch History) பேராசிரியராக அநேக ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்று திருச்சபை சம்பந்தமாக ஏராளமான புத்தகங்களை எழுதி வெளியிட்டு மறைந்த Rev. Professor I.A. Christdoss B.A.L.T.B.D.Min அவர்கள் எழுதிய நூல் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்டது.

**M.A.Nelson – சென்னை**
திருச்சபை சரித்திரத்தில் ஆர்வம்
கொண்ட ஓர் பரம்பரை கிறிஸ்தவர்.
29.08.2012